அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 118 /2017 RLTOP: /

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.R. இளங்கோ என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டின் 10 வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2024 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 05–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 05.11.2024 |
| பெயர் தாமோதரன் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:–

3. 04.12.1997 க்கு முன்பு மின்இணைப்பு எனது பெயரில் இருந்தது. மேற்படி மின் இணைப்பு எனது பெயரில் நேரடியாக கொடுக்கப்பட்டது. மேற்படி இணைப்பு ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு வழங்கப்பட்டது. அந்த ஆவணம் நான் வாங்கி வீட்டு பத்திரம் ஆகும். அதனை நான் சந்தரசேகர ராவ்விடம் இருந்து வாங்கினேன். சொத்து வரி எனது பெயரில் மாற்றப்பட்டுள்ளது. தாவா சொத்து பட்டா நிலம் ஆகும். மேற்படி பட்டாவும் சந்திரசேகர் ராவ் பெயரில் இருந்து எனது பெயரில் மாற்றப்பட்டது. தாவா சொத்து உரிமையாளர் என்ற அடிப்படையில் எனக்கு கிடைக்கப்பட்டது.

4. தாவாவில் எனக்கு சொத்து எப்படிகிடைத்தது என்ற விவரங்களை குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. அந்த

ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ 1 வங்கி கணக்கு 06.09.1995 அன்று தொடங்கபட்டது என்றால் சரிதான். 2ம் வாதி பெயரில் உள்ள வா.சா.ஆ 3 வங்கி கணக்கு எனது மனைவி பெயரில் உள்ளது. மேற்படி ஆவணத்தின் கதவு எண் 10A என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 4 ஆவணத்தில் கதவு எண் 10 B என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 5 ஆவணத்தில 10 B என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ 6 குடும்ப அட்டை நான் சொத்தை வாங்கியதற்கு பிறகு கொடுக்கப்பட்டது. அதற்கு முன்பு உள்ள குடும்ப அட்டையின் தொடர்ச்சி தான் வா.சா.ஆ.6. வா.சா.ஆ.7 இவ்வழக்கிற்கு தொடர்பு இல்லாதது என்று சொன்னால் எனக்கு தெரியாது.

6. நான் சந்தரசேகரிடம் இருந்து கிரையம் பெற்று தாவா சொத்தின் உரிமையாளர் என்ற அடிப்படையில் இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். தற்போது மின்இணைப்பு , வரிவிதிப்பு, பட்டா 1ம் பிரதிவாதியின் பெயரில் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதன் அடிப்படையில் அவர் பெயரில் ஆவணம் மாற்றப்பட்டது என்றால் நான் தாவா சொத்தை வங்கியில் அடமானம் வைத்திருந்தேன் அதனை திருப்பமுடியாமல் இருந்தபோது தாவா சொத்தை வாங்கிகொள்வதாக பிரதிவாதி கோரி பதிவு செய்தார் ஆனால் எனக்கோ வங்கிக்கோ உரிய பணத்தை கட்டவில்லை அதனால் வழக்கு தாக்கல் செய்தேன். நான் தாவா சொத்தில் கிரைன்டர் தொழில் செய்து வருகிறேன் அதன் மூலம் பிரதிவாதி எனக்கு தெரியும். கடனை அடைப்பதற்காக பிரதிவாதிக்கு சொத்தை கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். 17.09.1997ல் நான் கிரையம் எழுதிகொடுத்தேன் என்றால் சரிதான்.

7. அதன் அடிப்படையில் சொத்துரிமை அவருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விவரத்தை எனது பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது. உண்மையை மறைத்து தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்க தக்கது அல்ல, பரிகாரம் எனக்கு கிடைக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)